# அவசரநிலை அலைபேசி விழிப்பூட்டல்



## உங்கள் வாழ்க்கை, உடல்நலம் அல்லது சொத்து கடுமையான ஆபத்தில் இருந்தால், ஒரு அவசர அலைபேசி விழிப்பூட்டல் உங்கள் அலைபேசிக்கு அனுப்பப்படலாம்.

விழிப்பூட்டல்கள் செல் ஒளிபரப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனுப்பப் படுகின்றன, எனவே எங்கும் பதிவு செய்யவோ, பயன்பாட்டை பதிவிறக்கவோ வேண்டியதில்லை.அவை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டுமே அனுப்பப்படும். உங்கள் பகுதி பாதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே அவை உங்களுக்கு கிடைக்கும் .

குடியியல் பாதுகாப்பு மற்றும் அவசர மேலாண்மை அமைச்சகம், குடியியல் பாதுகாப்பு அவசரநிலை நிர்வாகக் குழுக்கள், NZ காவல் துறை, நியூசிலாந்தின் தீயணைப்பு மற்றும் அவசரநிலை, சுகாதார அமைச்சகம் மற்றும் முதன்மை தொழிற்துறை அமைச்சகம் ஆகியவற்றால் மட்டுமே அவசரகால அலைபேசி விழிப்பூட்டல் செய்திகளை அனுப்ப முடியும்.

உங்கள் அலைபேசி "ஆன்" இல் இருந்து, அவற்றைப் பெறும் திறன் இருந்து மற்றும் இலக்கு பகுதிக்குள் இருந்தால், நீங்கள் விழிப்பூட்டல்களை பெற முடியும். உங்கள் அலைபேசி விழிப்பூட்டல்களை பெற முடியுமா என்பதை civildefence.govt.nz இல் அறியலாம்.

அவசர அலைபேசி விழிப்பூட்டல் செய்திகள் பிற அவசர விழிப்பூட்டல்களுக்கு பதிலாக அல்ல. இவை மற்ற வழிகளுடன் சேர்ந்து உங்களுக்கு எச்சரிக்கை செய்வதற்கான கூடுதலான ஒரு வழி. உடனடியாக நடவடிக்கை எடுக்கவும். எல்லா அலைபேசிகளுக்கும் எச்சரிக்கையைப் பெறும் திறன் இல்லை, எனவே நீங்கள் ஒரு விழிப்பூட்டலைப் பெற்றால், மற்றவர்களுக்கு தெரியப்படுத்தவும். உங்கள் உயிர் ஆபத்தில் இருப்பதாக உணர்ந்தால், அதிகாரபூர்வ எச்சரிகைக்காக காத்திருக்காதீர்கள்.

## அவசர அலைபேசி எச்சரிக்கை எவ்வாறு செயல்படுகிறது?

அவசர அலைப்பேசி விழிப்பூட்டல்கள் ஒரு தனிப்பயனொதுக்கப்பட்ட குறிகையைப் பயன்படுத்துகின்றன, எனவே அலைபேசி மற்றும் இணைய போக்குவரத்தினால் வலையமைப்பு சுமை மிக அதிகம் ஆனாலும், அவசரநிலையில் அவை நம்பகமானவை.

நீங்கள் எந்த வலையமைப்பில் இருக்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல. ஒளிபரப்பப்பட்ட காலப்பகுதியில் அந்த பகுதிக்குள் நுழைந்த எந்தவொரு திறன் கொண்ட அலைபேசியும் இந்த விழிப்பூட்டலைப் பெறும்.

## அவசர அலைபேசி விழிப்பூட்டல்களை பெறுவதை நான் தவிர்க்கலாமா?

அவசர அலைபேசி விழிப்பூட்டல்கள் உங்கள் பாதுகாப்பிற்காக என்பதால், நீங்கள் அவசர அலைபேசி விழிப்பூட்டல்ள் பெறுவதைத் தவிர்க்க முடியாது. உங்கள் அலைபேசி பிற நாடுகளில் பயன்படுத்தப்படும் விருப்ப அமைப்புகளைக் காட்டலாம், ஆனால் நியூசிலாந்தில், நிரந்தரமாக இருக்கும் சிறப்பு ஒளிபரப்பு அலைவழியை நாங்கள் பயன்படுத்துவோம்.

## ஒரு அவசர மொபைல் விழிப்பூட்டலைப் பெற்றால் நான் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் செய்வதை நிறுத்திவிட்டு அறிவுறுத்தல்களை பின்பற்றுங்கள்.

அவசர மொபைல் விழிப்பூட்டல்களை அங்கீகரிக்கப்பட்ட அவசர நிறுவனங்கள் மட்டுமே அனுப்ப முடியும், மேலும் வாழ்க்கை, உடல்நலம் அல்லது சொத்திற்கு கடுமையான அச்சுறுத்தலாக இருந்தால் மட்டுமே (மற்றும் ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு முறை சோதனைகள் அனுப்புவதால், நீங்கள் ஒரு விழிப்பூட்டலைப் பெற்றீர்கள் என்றால் கனகாரியமாக, அதில் சொல்வதை கடைபிடியுங்கள்.

## அவசர அலைப்பேசி விழிப்பூட்டல் பிற வழிகளுக்கு பதிலாக அல்ல

அவசரநிலை ஏற்பட்டால், அவசர அலைப்பேசி விழிப்பூட்டல் உங்களை பாதுகாப்பாக வைத்திருக்க மற்றொரு வழியாகும். வானொலி, தொலைக்காட்சி, வலைத்தளங்கள் மற்றும் சமூக ஊடகம் போன்ற பிற வழிகள் இன்னமும் பயன்படுத்தப்படும். விழிப்பூட்டல்கள் பிற விழிப்புணர்வு முறைகளுக்குப் பதிலாகவோ, அல்லது இயற்கை எச்சரிக்கைகளுக்கு பிறகு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு பதிலாகவோ அல்ல.

அவசரநிலைக்கு நீங்கள் இன்னும் தயாராக இருக்க வேண்டும், நீங்கள் செயல்படுவதற்கு முன்பாக விழிப்பூட்டல் பெற காத்திருக்கக்கூடாது. உங்கள் உயிர் ஆபத்தில் இருப்பதாக உணர்ந்தால், அதிகாரப்பூர்வ எச்சரிகைக்காக காத்திருக்காதீர்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

அவசரகாலத்தில் என்ன செய்ய வேண்டும், எங்கு செல்ல வேண்டும், யார் உங்களுக்கு உதவ முடியும், உங்கள் உதவி யாருக்கு தேவைப்படலாம் போன்றவற்றை உள்ளிட்ட உங்கள் சொந்த அவசரகால திட்டத்தை தீட்ட நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு திட்டத்தை ஆன்லைனில் happens.nz இல் தீட்டலாம்.

அவசர மொபைல் எச்சரிக்கைகள் பற்றி மேலும் civildefence.govt.nz இல் அறியவும்.

உங்கள் உயிர் , உடல்நலம் அல்லது சொத்து ஆபத்தில் இருந்தால், அவசர அலைப்பேசி விழிப்பூட்டல்கள் எங்கும் பதிவு செய்யவோ, பயன்பாட்டை பதிவிறக்கவோ தேவை இல்லாமல் .உங்கள் அலைபேசிக்கு அனுப்பப்படலாம்.

**உங்கள் அலைப்பேசியின் ஒத்தியல்பை சரிபார்க்க civildefence.govt.nz ஐப் பார்க்கவும்.**

EMERGENCY MOBILE ALERT

TAMIL